# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1987 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க,

# தேசிய தொழிற்பயிற்சி (திருத்தச்) சட்டம்

---

*[1987, ஜனவரி மாதம் 30 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1987, ஜனவரி மாதம் 30 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

*விலை : சதம் 30* *தபாற் செலவு : சதம் 75*

## 1987 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, தேசிய தொழிற்பயிற்சி (திருத்தச்) சட்டம்

[1987, ஜனவரி மாதம் 30 ஆம் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 76/84

### 1971 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, தேசிய தொழிற்பயிற்சிச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப்பெயர்.

1. இச்சட்டமானது 1987 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, தேசிய தொழிற்பயிற்சி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1958 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்கச் சட்டத்தின் 50 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும், 1971 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, தேசிய தொழிற்பயிற்சிச் சட்டத்தின் 50 ஆம் பிரிவு அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 50அ என்ற புதிய பிரிவை உட்புகுத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 50 ஆம் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 50அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாயநிதியச் சட்டத்தினதும், 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தினதும் ஏற்பாடுகள் தொழில் பயிலுநரொருவருக்கு ஏற்புடைத்தாதலாகாது.

50அ. இப்பிரிவு நடைமுறைக்கு வருந் தேதியன்றும் அதன் பின்னரும், 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாயநிதியச் சட்டத்தினதும், 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டத்தினதும் ஏற்பாடுகள், இச்சட்டத்தில் வரைவிலக்கணங் கூறப்பட்டவாறான தொழில் பயிலுநரொருவருக்கு ஏற்புடைத்தாதலாகாது.".

ஏ 060517—2,810 (86/05)

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.